Training Institutes run by the Women's Welfare Department.

* 191. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken to provide employment to the adult trainees from the Training Institutes run by the Women's Welfare Department?

மகளிர் நலத் துறையால் நடத்தப்படும் (தொழிற்) பயிற்சி நிலையங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மகளிர் நலத் துறையால் நடத்தப்படும் (தொழிற்) பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுத் தேறி வரும் வயது வந்த பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சமூகப் பொருளாதார நிலையில் பிற்பட்டுள்ள மகளிருக்குச் சிறு கைத்தொழில்களில் முனைப்பான பயிற்சியளிக்கும்பொருட்டு, மகளிர் நலத்துறை பணிநிலையங்களை நடத்துகிறது. இந்தப் பணி நிலையங்களில் மூன்று அல்லது நான்கு தொகுதியினருக்குப் பயிற்சியளித்த பின்னர், அங்குப் பயிற்சி பெற்ற மகளிரை வேலைக்கு நியமிப்பதன் மூலம் அவற்றை உற்பத்திப்பிரிவுகளாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றையும் மகளிர் நலத் துறை தொடங்கியுள்ளது.

Special Care and Rehabilitation Homes.

* 192. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the total number of Special Care and Rehabilitation Homes in the State; and

(*b*) the facilities provided to the inmates at these Homes?

சிறப்புக் காப்பு-புதுவாழ்வு இல்லங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைசசர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள சிறப்புக் காப்பு-புதுவாழ்வு இல்லங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1972 ஆகஸ்ட் 22]

(இ) இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) நமது மாநிலத்தில் சிறப்புக்காப்பு இல்லங்கள், புதுவாழ்வு இல்லங்கள் மூன்று கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :—

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூர்.
2. தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை.
3. தருமபுரி மாவட்டத்தில் பர்கூர்.

(இ) இலவச இடவசதி, உணவு வசதி தவிர இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ உதவியும் அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்களில் உள்ளவர்களுக்கு துணியும், படுக்கையும் கொடுக்கப்படுகிறது. பாய் முடைதல், சோப்பு தயாரித்தல், பினயில் தயாரித்தல் முதலிய சில புதுவாழ்வுப்பணிகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்கள் அனைத்திலும் கோழிப்பண்ணைகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இல்லங்களில் உள்ள அனைவரையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவந்து அவர்களை உரிய ஆதாய முள்ள வேலைகளில் அமர்த்தி அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே முடிவான நோக்கமாகும்.

Estate Employees.

*193. Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the staff previously employed in estates and retained in Government service after the abolition of the estates, are eligible for any pension after retirement; and

(b) if so, whether they have been paid the same?

எஸ்டேட் பணியாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) முன்பு எஸ்டேட்டுகளில் பணி புரிந்து எஸ்டேட்டு ஒழிப்புக்குப் பின்னர் அரசுப் பணியில் வைத்துக்கொள்ளப்பட்ட பணியாளர்கள், அவர்களுடைய ஓய்வுகாலத்திற்குப் பிறகு ஓய்வூதியம் ஏதேனும் பெறத் தகுதியுடையவர்களா?

(இ) ஆம் எனில், அதற்காக அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.